மாலை முரசு

பக்கங்கள் 14

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 26 செவ்வாய்க்கிழமை 12.09.2023 அதிர்வு 43

## மீண்டும் அரசியலில் குதிக்கிறார் கோட்டா?



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவதற்கான ஆயத்தங்கள் ஏற்பாடு 04

## மூன்று ஆண்டுகளில் 9,700 பேர் தற்கொலை

கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டில் சுமார் 9 ஆயிரத்து 700 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார். 04

## பணிப் புறக்கணிப்பு காரணமாக 36 ரயில் சேவைகள் இன்று ரத்து

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ரயில் இயககுநர்கள் சங்கம், முன்னெடுத்து வரும் பணிப்புறக்கணிப்பு காரணமாக இன்று நண்பகல்வரை 36 ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

ரயில் திணைக்களத்தின் பேச்சாளர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். 04

## ‘800’ படத்திலிருந்து சர்ச்சைக்குரிய வசனம் நீக்கம்!

### அமைச்சர் ஜீவனுக்கு இயக்குநர் அறிவிப்பு




உலக சாதனை பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனின் வாழ்க்கை படமான ‘800’ இல் இருந்து 03

## அத்தியாவசிய சேவையாக ரயில் போக்குவரத்து அறிவிப்பு

### அமைச்சர் அதிரடி நடவடிக்கை



ரயில் சேவையை இன்று நள்ளிரவு முதல் அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்படும் என்றும், அதனை மீறும் அதிகாரிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளரும் போக்குவரத்து அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார். 04

# தையிட்டியில் காணி அளவீடு: மக்கள் எதிர்ப்பால் நிறுத்தம்!

## அரசியல்வாதிகளும் களமிறங்கிப் போராட்டம்





- எஸ்.நிதர்ஷன் -

வலிகாமம் வடக்கு தையிட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு அண்மையில் இன்று முன்னெடுக்கப்பட இருந்த காணி அளவீட்டுப் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

காணி அளவீட்டுப் பணி இன்று காலை முன்னெடுக்கப்பட இருந்த நிலையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனையடுத்துத் தெல்லிப்பழை பிரதேச செயலாளரின் அறிவித்தலுக்கு அமைய அளவீட்டுப் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. 04



## பெருந்தோட்ட தாக்குதல் சம்பவங்களுக்கு முடிவுகட்ட விசேட மாநாட்டைக் கூட்டுங்கள்

### ஜனாதிபதிக்கு மனோ அவசர கடிதம்



பெருந்தோட்ட தாக்குதல் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டுவர சகல தரப்பினையும் அழைத்து அவசர மாநாடைக் கூட்டுமாறு கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார் 04

# மாணவனைத் துஷ்பிரயோகம் செய்த அதிபருக்கு ஏழு ஆண்டுகள் சிறை!

## மன்னார் நீதிபதி தீர்ப்பு

பதின்ம வயது மாணவனை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்திய பாடசாலை அதிபருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிஹறால் தீர்ப்பளித்தார்.

“தனது கட்டுகாவலில் உள்ள மாணவர்களைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்குவது பாரதூரமான குற்றமாகும். தற்போது அதிகரித்து வரும் இத்தகைய செயற்பாடுகளுக்கு கடும் தண்டனை வழங்கப்படுவது அவசியம்.” என்று மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம்.மிஹறால் தீர்ப்பில் கோடிட்டு காட்டினார்.

2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் 23 ஆம் திகதி மன்னார் பாடசாலையில் கற்ற 10 வயது மாணவன் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்படுத்தப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மாணவன் கல்வி கற்ற



பாடசாலை அதிபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

மன்னார் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற சுருக்கமுறையற்ற விசாரணைகளின் பின் சட்டமா அதிபரால் மன்னார் மேல் நீதிமன்றில் பாடசாலை அதிபருக்கு எதிராகக் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிஹறால் முன்னிலையில் விளக்கம் இடம்பெற்ற நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (11) வழக்கு தீர்ப்புக்காக எடக்கப்பட்டது.

சந்தேகநபர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிபுணத்துவச் சாட்சியங்கள் ஊடாக நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் வழக்குத் தொடுநரால் நிரூபிக்கப்பட்டது.

இந்த நிலையில் சந்தேகநபர் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டார்.

இந்த நிலையில், “குற்றவாளிக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்படுகிறது, செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும். பாதிக்கப்பட்ட மாணவனுக்கு ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும். வழங்கத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்” என்று நீதிவான் உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தது.

வழக்குத் தொடுநர் சார்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி செஸான் மஹ்பூம் வழக்கை நெறிப்படுத்தினார்.

### குருந்தூர் மலை விவகாரம்

# வன்னி நாடாளுமன்ற உறுப்பினருக்கு முல்லை. நீதிமன்று அழைப்பாணை!

**(மன்னார் நிருபர்)**

முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜராகுமாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கத்துக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றில் நாளை மறுதினம் 14 ஆம் திகதி வியாழக்கிழமை ஆஜராகுமாறு முல்லைத்தீவு பொலிஸார் ஊடாக நீதிமன்ற அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளையையும் மீறி பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டிருந்த நிலையில், பூசை வழிபாடுகளுக்காக சென்ற பௌத்த குருமாரின் வழிபாட்டுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் அவமானப்படுத்திய குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சில பிக்குகள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அந்த முறைப்பாட்டுக்கமைவாக முல்லைத்தீவு பொலிஸார் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன் உட்பட பலரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு வழக்கு தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் முதன் முதலாக நாடாளுமன்ற உறுப்பினருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

# களுத்துறை கொலை வழக்கு நால்வருக்கு மரண தண்டனை!

களுத்துறையில் கூரிய ஆயுதங்களால் தாக்கி நபரொருவரைக் கொலை செய்த சம்பவத்தில் நால்வருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் நால்வரும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

அவர்களுக்கு மரண தண்டனை விதித்துக் களுத்துறை மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் திகதி களுத்துறை மதினகந்த பிரதேசத்தில் ஆயுதங்களால் தாக்கி நபரொருவரை கொலை செய்தமை மற்றும் மேலும் ஒருவருக்கு பலத்த காயங்களை ஏற்படுத்தியமை தொடர் பில் சந்தேக நபர்கள் 07 பேருக்கு எதி ராக சட்டமா அதிபரால் களுத்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கில் 1,2,3 மற்றும் 5 ஆகிய குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கே இவ்வாறு மரணத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

6 ஆம் மற்றும் 7 ஆம் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களை விடுதலை செய்வதற்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நான்காவது நபர் உயிரிழந்துள்ளார் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட விசாரணைகள் இடம்பெற்ற இந்த வழக்கில் 14 பேரிடம் சாட்சியங்கள் பெறப்பட்டிருந்தது.

அதற்கமைய, முன்னெடுக்கப்பட்ட தொடர் வழக்கு விசாரணைகளை அடுத்து குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நால்வரையும் குற்றவாளிகளாக அறிவித்து களுத்துறை மேல் நீதிமன்றம் நேற்று (11) மரணத் தண்டனை விதித்துள்ளது.

# வவுனியா வைத்தியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்




வவுனியா பொது வைத்தியசாலை வைத்தியர்கள் இன்று நண்பகல் 12.00 மணியளவில் வைத்தியசாலை முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

நாடு முழுவதும் அமைதி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்திருந்தது. அதற்கு அமைவாகவே இந்த ஆர்ப்பாட்டம் வவுனியாவிலும் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வைத்தியர்கள் "மருந்துகள் இல்லை. சுகாதார கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது, தனியார் மருத்துவத்தை வளர்க்க இலவச மருத்துவத்தை அழிக்காதே, வைத்தியர்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்து, வைத்தியர்களை வெளியேற நிர்பந்தித்து இலவச வைத்திய சேவையை முடக்கும் சதியை முறியடிப்போம், திறமையற்ற சுகாதார நிர்வாகிகளே வைத்தியர்களின் தொழில் உரிமையில் கை வைக்காதே"என எழுதப்பட்ட பதாததைகளையும் ஏந்தியிருந்தனர்.

அத்துடன், இலங்கையில் இருந்து பல வைத்தியர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாது மருந்துகள் பற்றாக்குறை காணப்படுகின்றது. வைத்தியர்களின் வெளியேற்றதால் எமது சுகாதார துறை மேலும் பலவீனம் அடையும். எமது கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியும் எமக்குத் தீர்வு கிடைக்காமையால் ஆர்ப்பாட்டத்தை செய்துள்ளோம். இதற்கும் தீர்வு இல்லையெனில் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வவுனியா பிரதிநிதிகள், வைத்தியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## திருநெல்வேலி விடுதியில் இருந்து

# மகள் சடலமாக இன்று மீட்பு; தாயார் ஆபத்தான கட்டத்தில்!

யாழிலுள்ள விடுதி ஒன்றிலிருந்து மகள் உயிரிழந்த நிலையில் சடலமாகவும் தாயார் ஆபத்தான நிலையிலும் மீட்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ் திருநெல்வேலியிலுள்ள விடுதியில் தாயாரும் மகளும் தங்கியிருந்து வந்துள்ளனர். இந்நிலையில் அவர்கள் தங்கியிருந்த அறையில் துர்நாற்றம் வீசியதையடுத்து பொலிஸாருக்கு விடுதி உரிமையாளர்களால் தகவல் கொடுக்கப் பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த அறையை திறந்து பார்த்த போது அங்கிருந்த தாயார் மிகவும் ஆபத்தான நிலையும் மகள் உயிரிழந்த நிலையிலும் காணப்பட்டுள்ளனர்.

மகளின் இறப்பு கொலையை தற்கொலையாக இருக்கலாம் என்ற கோணத்தில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## ஆன்மீக பிரசாரகருக்கு சான்றிதழ் வழங்கல்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீகப் பிரசாரகர்களுக்கான சான்றிதழ் கற்கைநெறி, ஆன்மிக பிரசாரகர்களுக்கான பட்டயக் கற்கைநெறி மற்றும் யோகாசன உயர்சான்றிதழ் கற்கைநெறி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை புதன்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் காலை 7.30 மணிக்கு நடைபெறும்.

**'800' படத்திலிருந்து...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'தோட்டக்காட்டான்' என்ற வசனத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அத்திரைப்படத்தின் இயக்குநரான எம்.எஸ்.ஸ்ரீபதி தெரிவித்துள்ளார் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை அமைச்சரின் ஊடகப் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

'800' படத்தின் முன்னோட்டம் அண்மையில் வெளியானது, இதில் நடிகர் நாசரால் 'தோட்டக்காட்டான்' என்ற வசனம் உச்சரிக்கப்படுகின்றது. இந்த சொல்லாடலுக்கு, வசனத்துக்கு மலையகத் தமிழர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு வலுத்தது. சமூகத்தைக் கொச்சைப் படுத்தும் வகையில் அமைந்துள்ள இந்த வசனம் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்தது.

இந்நிலையில் '800' முன்னோட்டத்தில் உள்ள இந்த வசனத்தை மாற்றியமைக்குமாறு மக்கள் சார்பில் படத்தின் இயக்குநரிடம் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, '800' திரைப்படத்தில் அந்த வசனம் நீக்கப்படும் என்ற உத்தரவாதம், எழுத்துமூலம் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் உள்ளிட்டவர்களும் இந்த நாகரிகமற்ற சொற்பதத்துக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**பெருந்தோட்ட...**

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

மனோவால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இரத்தினபுரி மாவட்ட காவத்தை பெருந்தோட்ட நிறுவன வெள்ளந்துரை தோட்டம், இதற்கு முன் மாத்தளை மாவட்டத்தில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள் முடிவுக்கு வரவில்லை. இவை தொடர்கின்றன. இரத்தினபுரி, மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன, “பெருந்தோட்டங்களுக்கு உள்ளே செயற்பட முடியவில்லை. தயவு செய்து அரசியல் உயர் மட்டத்தில் பேசி நடைமுறை அதிகாரத்தை பெற்றுத் தாருங்கள்” என என்னிடம் கோரினார். பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண “இந்த கம்பனிகாரர்களை கட்டுப்படுத்த முடியவில்லை” என்று ஜனாதிபதியிடம் முறையிடும்படி என்னிடம் கூறினார்.

இவை தொடர்பில் உங்களிடம் தொலைபேசியில்வ உரையாடிய போது, எழுத்து மூலமான ஒரு முன்மொழிவை தரும்படி கேட்டீர்கள். அதன்படி அனைத்து தரப்பினரையும் அழைத்து அவசர மாநாடு நடத்தி, இந்தத் தாக்குதல் சம்பவங்களுக்கு நிரந்தரமான தீர்வை காணும்படி உங்களை மூலம் கோருகிறேன்.

ஜனாதிபதி, பொது நிர்வாக அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண, பொலிஸ்துறை அமைச்சர் டிரான் அலஸ், அரசு - எதிரணி தரப்புகளை சார்ந்த ஒன்பது மலையக எம்.பிக்கள், கொழும்பு, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, காலி, மாத்தறை, குருநாகலை ஆகிய 12 மாவட்டங்களின் செயலாளர்கள், பொலிஸ்மா அதிபர், 22 பெருந்தோட்ட நிறுவன மேலாளர்கள், உள் குத்தகை பெற்றுள்ள தோட்ட நிறுவன மேலாளர்கள், 3 அரச பெருந்தோட்ட அதிகாரிகள், மலையக சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோரை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து அவசர மாநாட்டை நடத்தி நிரந்தர தீர்வை காணுங்கள்.

இரத்தம், வியர்வை சிந்த இந்நாட்டை வளப்படுத்திய பெருந்தோட்ட மக்கள், இன்று 200 வருடங்களை இந்நாட்டில் நிறைவு செய்கிறார்கள். இந்நாட்டுக்கு அவர்களின் அவர்களது குறைத்து மதிப்பிட முடியாதது. மலையக தமிழர்கள் மத்தியில் பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற இம்மக்கள், எனது தொகுதி கொழும்பு அவிசாவளை முதல் சுமார் 12 மாவட்டங்களில் படும்பாடு மிக மோசமானதாகும். நீதிமன்ற ஆணை இல்லாமல் அவர்களது வீடுகள் உடைக்கப்படுகின்றன. ஆங்காங்கே நடைபெற்ற சம்பவங்கள் இப்போது பரவலாக நடைபெறுகின்றன. பல சம்பவங்கள் பகிரங்கமாவதில்லை. ஒருசிலவே வெளியில் தெரிய வருகின்றன.

தோட்டங்களில் வாழும் மக்களுக்கான வசிப்பிட, வாழ்வாதர காணி உரிமை தொடர்பில் நாம் கூடி பேசி கொள்கை முடிவு எடுக்க வேண்டும். அவை மாவட்ட செயலாளர்களுக்கும், பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டும். தயவு செய்து அவசர மாநாட்டை உங்கள் தலைமையில் கூட்டுங்கள்.” - என்றுள்ளது.

---

**மூன்று ஆண்டுகளில்...**

சுகாதார அமைச்சின் புள்ளி விபரவியல் தகவல்களின் அடிப்படையில் இந்த விடயத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

கடந்த 2022ஆம் ஆண்டில் மட்டும் 3 ஆயிரத்து 406 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்றும், இதில் 2ஆயிரத்து 832 பேர் ஆண்கள் எனவும் தெரியவந்துள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலைமைகள் காரணமாக கடந்த ஆண்டில் 192 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

மொத்த தற்கொலைச் சம்பவங்களில் ஐந்து வீதமான தற்கொலைகள், பொருளாதார நெருக்கடி காரணமாக இடம்பெற்றுள்ளன என்று பேராசிரியர் வசந்த அத்துக்கோரள மேலும் தெரிவித்துள்ளார்.

---

**தையிட்டியில்...**

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நில ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியமையுடன் காணி அளவீடு செய்ய வந்த அதிகாரிகளுடன் தமது பக்க நியாயங்களையும் எடுத்துரைத்திருந்தனர்.

தங்களுடைய காணிகள் ஏற்கனவே முப்பது வருடங்களுக்கு மேலாக உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் இருக்கின்ற நிலையிலும் யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் காணிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தைச் சேர்ந்தோர் எனப் பலர் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து இன்று காலை தையிட்டி பகுதியில் கூடியிருந்தனர்.

அந்தப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.எனினும் திடீரென காணி அளவிடுகள் இடம்பெறவில்லை என அறிவிக்கப்பட்டது.

---

**மீண்டும் அரசியலில்...**

செய்யப்பட்டு வருகின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வருடம் இடம்பெற்ற மக்கள் எழுச்சிப் போராட்டங்களால் பதவி விலகினார். இதனையடுத்து அவர் அரசியலில் ஈடுபடுவதில் மௌனத்தைக் கடைப் பிடித்து வந்தார்.

இந்நிலையில், தற்போது தோல்வியடைந்த தனது பிம்பத்தை மீண்டும் கைப்பற்றி வலுப்படுத்த கோட்டாபய முனைந்துள்ளார் எனச் செய்தி வெளியாகியுள்ளது.

நேற்று அரசியலில் பிரவேசிப்பதாக அறிவித்த அவரது நெருங்கிய உதவியாளரும் ஊடக உரிமையாளருமான ஒருவரால் தற்போது புதிய அரசியல் கட்சி தொடங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அதற்குள் தனது பிம்பத்தை மாற்ற கோட்டாபய திட்டமிட்டுள்ளார்.

மக்களால் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்ட போதிலும் முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அனைத்து சலுகைகளையும் வசதிகளையும் பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ, அண்மையில் தனது நெருங்கிய உதவியாளரான திலித் ஜயவீரவினால் தலைமைத்துவம் ஏற்கப்பட்ட மௌபிம ஜனதாக் கட்சிக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

திலித் ஜயவீர கட்சியைப் பொறுப்பேற்றதன் பின்னர் மௌபிம ஜனதா கட்சி தனது யாப்பை மாற்றியமைத்து புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்துள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கட்சி இப்போது புதிய உறுப்பினர்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மேற்படி கட்சி கோட்டாபய ராஜபக்ஷவின் வியத்மக அமைப்பு போன்ற கட்டமைப்பை உருவாக்கி தொழில் வல்லுநர்கள் மற்றும் வர்த்தகர்களைத் தொடர்புகொள்ள ஆரம்பித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்தநிலையில், கடந்த 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் அண்மையில் சனல் 4 ஊடகம் வெளியிட்ட காணொலியில் பிரதான சூத்திரதாரிகளின் பெயரில் கோட்டாபயவின் பெயரும் கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

**அத்தியாவசிய...**

அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நேற்று நள்ளிரவு முதல் ரயில் இயக்குநர்கள் சங்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார்.

---

**பணிப் புறக்கணிப்பு...**

அலுவலக ரயில்கள் உள்ளிட்ட 36 சேவைகள் இவ்வாறு ரத்தாகியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நேற்று நள்ளிரவு முதல் ரயில் இயக்குநர்கள் சங்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றது.






# மல்வான முபாறக் கல்லூரியின் நூற்றாண்டு விழா வாகன பவனி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மல்வான அல் முபாறக் தேசிய கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வகன பவனி மற்றும் நடைபவனி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

1987 முதல் 2015 வரை இந்தக் கல்லூரில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் வகுப்புக் குழுக்களாக இதில் பங்கேற்றனர்.

இந் நிகழ்வில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும், இக்கல்லூரியின் பழைய மாணவருமான காதர் மஸ்தான், முன்னாள் பியகம பிரதேச சபை உறுப்பினர் எம்.எச்.எம்.அன்வர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் றஹ்மான், பாடசாலை அதிபர் எஸ்.எச்.எம்.நயீம் , ஓய்வுபெற்ற மேல் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அல்ஹாஜ் எம்.எம்.ஏ.கபூர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு உதவி

(அ.அஸ்வர்)

இலங்கை பத்திரிகை பேரவையின் 50 ஆவது நிறைவை முன்னிட்டும், ஆரோக்கியமான ஊடகவியல் மற்றும் பத்திரிகையாளர்களின் நலன்புரி வாழ்வியலை முன்னேற்றும் சபையின் நோக்கத்துக்கு அமைவாகவும் ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு இலவசமாகப் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

ஊடகவியலாளர்களதும் அவர்களது பிள்ளைகளதும் நலன்புரி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக பொருளாதார பிரச்சினைகளுக்கு மத்தியில் ஊடக சேவையை முன்னெடுத்துச் செல்லும் ஊடகவியலாளர்களுக்கு தொழிற்றுறை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் சந்தர்ப்பங்களை உருவாக்குவது இலங்கை பத்திரிகை பேரவையின் நோக்கமாகவுள்ளது. இதன் பிரகாரம் இந்த உதவியைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஊடகவியலாளர்கள் தமது விவரங்களை உள்ளடக்கிய விண்ணப்ப படிவத்தைப் பூரணப்படுத்தி எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை பத்திரிகை பேரவைக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சர்வதேச விசாரணையே வழி

'சனல்-4' வெளியிட்ட பிந்திய காணொலியின் விளைவுகளைப் புரிந்து கொள்வது கஷ்டமாக இருக்கிறது. ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு விதமாக வியாக்கியானம் செய்கின்றன.

தமிழர்கள் மீதான சிங்களத்தின் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற விடயங்களில் சர்வதேச விசாரணையை அடியோடு ஏற்கோம் என்று நிராகரித்த சிங்களம், இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு இடம் அளிப்பது இலங்கையின் இறைமையை மீறும் செயலென வியாக்கியானம் வேறு கூறி வந்தன.

இப்போது ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான விடயத்தில் 'சனல்-4' காணொலியை அடுத்து தென்னிலங்கை சிங்களத்தின் உள்வீட்டு அரசியல் எதிரிகளை வீழ்த்துவதற்காக தென்னிலங்கைத் தலைவர்கள் சர்வதேச விசாரணையை வலியுறுத்துகின்றனர். அத்தகைய நிலையில் இதுவரை அவர்கள் வலியுறுத்திய நாட்டின் இறைமை என்னவாயிற்று என்ற எந்த விளக்கமும் இல்லை.

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த விவகாரத்தில் தங்கள் தலையைத் தப்ப வைப்பதற்கும், மேலதிகமாக அரசியலில் எதிர்த் தரப்பை வீழ்த்துவதற்காகவும், சர்வதேச விசாரணையை இத்தரப்புகள் கோருவதுதான் முக்கியமானது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்களும், கிறிஸ்தவ மதத் தலைவரான கர்த்தினால் மல்கம் ரஞ்சித்துமே முதலில் இந்த சர்வதேச விசாரணையைக் கோரினர்.

தமிழர் மீதான யுத்தக் குற்ற விவகாரத்தில் ஏற்கனவே இத்தகைய விசாரணையைக் கோரி வந்த தமிழர் தரப்பு, இந்த விடயத்திலும் அத்தகைய நிலைப்பாட்டை எடுத்தமை எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே.

மற்றொரு சிறுபான்மைத் தரப்பான முஸ்லிம்களும் இந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான முழுப் பழியும் தங்கள் சமூகத்தின் மீது விழுவதில் இருந்து மீளுவதற்கு சர்வதேச விசாரணை உதவும் என்ற எதிர்பார்ப்பில் அதை வரவேற்றனர். அதுவும் ஆச்சரியம் தருவதன்று.

ஆனால், இந்த 'சனல்-4' காணொலி மூலம் பிய்த்து உதறப்படும் ராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தானும் சர்வதேச விசாரணையை எதிர்கொள்ளத் தயார் என்கின்றார்.

அதேபோல ஆளும் தரப்பின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுனவில் (மொட்டுக் கட்சியின்) செயலாளர் சாகர காரியவசமும் 'சனல்-4' வெளியிட்டுள்ள காணொலி தொடர்பாக சர்வதேச விசாரணை இடம்பெற்றால் அதனை முழுமையாக ஏற்றுக் கொள்வோம் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

இதுதான் நிலைமை என்றால் - பிரதான அரசியல் தரப்புகள் எல்லாம் சர்வதேச விசாரணைக்கு இணங்குமானால் - அதை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏன் பின்னடிப்புக் காட்ட வேண்டும்? இணங்கிப் போய் சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுவதுதானே...?

'சனல்-4' கிளப்பியுள்ள சர்ச்சையின் பிரதான சாட்சியாளரான ஆஸாத் மௌலானா இலங்கை திரும்ப மாட்டார் என்ற பின்புலத்தில் இவ்விடய்த்தில் நீதியான விசாரணைக்கு சர்வதேச மட்டத்தில் அது முன்னெடுக்கப்படுவதுதான் ஒரே வழியாகும்.




# ஐஸ் ஏற்றி வந்த 'கெப்' புரண்டது!

## கல்முனையில் சம்பவம்

( வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை பிரதேசத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி ஐஸ் ஏற்றிச் சென்று கொண்டிருந்த 'கெப்' ரக வாகனம் இன்று (12) செவ்வாய்க்கிழமை அதிகாலை தடம்புரண்டது.

கல்முனை பாண்டிருப்பு தியேட்டருக்கு முன்னாள் உள்ள வளைவில் இந்த விபத்து ஏற்பட்டது.

வாகனத்தின் சாரதியும் காப்பாளரும் சிறு காயங்களுக்கு ஆளாகினர். இருவரும் அருகில் உள்ள கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

'கெப்' வாகனத்தின் பின் ரயர் வெடித்ததில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடம் புரண்டதால் வீதியெங்கும் ஐஸ் கட்டிகள் சிதறின. இதனால் போக்குவரத்து ஒரு சில மணி நேரம் தடைப்பட்டது.

கல்முனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சமூக விஞ்ஞான போட்டியில் தேசிய மட்டத்துக்குத் தெரிவு



(எஸ்.அஷ்ரப்கான்)

மாகாண மட்ட சமூக விஞ்ஞான போட்டியில் அம்பாறை மாவட்டம், ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலய மாணவி ஏ.எப். இஸ்ரா வெற்றி பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த மாணவியைப் பாராட்டிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று (11) பாடசாலையில் அதிபர் அஷ்ஷெய்க் யூ.கே. அப்துல் ரஹீம் தலைமையில் இடம்பெற்றது.

இங்கு சமூக விஞ்ஞான பாட இணைப்பாளர், உதவி அதிபர் ஏ.ஜே.எம்.றினீஸ் மற்றும் அதிபர் யூ.கே. அப்துல் ரஹீம் இணைந்து மாணவியைப் பாராட்டிக் கௌரவித்தனர்.

நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ஏ. கமறுந் நிஸா, உதவி அதிபர் எம்.எச்.மஹ்மூத் நஸீம் உட்பட வலயத் தலைவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மாயமான வழக்குச் சான்றுப் பொருள்: பெலிஸ் நிலையம் சென்ற நீதிமன்று!

யாழ். மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குச் சான்றுப் பொருளான 50 கிலோ கஞ்சா மாயமாகி உள்ளது என்று தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தின் வழக்கு சான்று பொருள்களுக்கு பொறுப்பான அதிகாரியால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பகுதியில் கைப்பற்றப்பட்ட கஞ்சா தொடர்பான வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் 50 கிலோ கஞ்சா களவாடப்பட்டுள்ளது அல்லது மாயமாகியுள்ளது என்று இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சான்றுப் பொருளே இவ்வாறு காணாமல் போயுள்ளது.

இது தொடர்பான விரிவான விசாரணைகளைத் தெல்லிப்பளை பொலிஸார் மாற்றும் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

Save a Life

Every Drop Counts

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு

இரத்ததான முகாம்

புரட்டாதி 12ம் திகதி (சப்பறத் திருவிழா)
பி.ப 4 மணி முதல் - பி.ப 8 மணி வரை

புரட்டாதி 13ம் திகதி (தேர்த் திருவிழா)
மு.ப 8 மணி முதல் - பி.ப 8 மணி வரை

புரட்டாதி 14ம் திகதி (தீர்த்த திருவிழா)
மு.ப 8 மணி முதல் - பி.ப 8 மணி வரை

புரட்டாதி 15ம் திகதி (பூங்காவன திருவிழா)
பி.ப 4 மணி முதல் - பி.ப 8 மணி வரை

இடம்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
யாழ் மாநகர சபை, நல்லூர்.

தொடர்புகளுக்கு: 0772105375
0766242311

“உதிரம் கொடுப்போம்
உயிர் காப்போம்”





# நல்லூரில் தெய்வீக திருக்கூட்டத் தொடர்

## 22 ஆம் நாள் நிகழ்வு

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டத் – தொடர் நிகழ்வின் 22ஆம் நாள் நிகழ்வு நேற்று (11) ஞாயிற்றுக் கிழமை சிவஸ்ரீ யதுகர குருக்கள் தலை மையில் தலைமையில் நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்ட பத்திலே இடம் பெற்றுள்ளது.

மாகாண காணி ஆணையாளர் அ.சோதிநாதன் பிரதம அதிதியாகவும்

கலாநிதி வீரமங்கை யோகரட்ணம் சிறப்பு அதிதியாகவும் இதில் கலந்து கொண்டனர்.

காரைநகர் கலாமன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்கள் நிகழ்வுகளை வழங்கியிருந்தனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக நடன போதனாசிரியர் நாட்டிய வித்தகன் அனந்தகிருஷ்ணன் ஸ்ரீ காந் அவர்க ளின் நாட்டியாஞ்சலி மற்றும்

பிரம்மஸ்ரீ ஏ.ஜி.எஸ். சுவாமிநாத சர்மா குழுவினர் வழங்கிய இசை அர்ச் சனை சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது..

அதனைத்தொடர்ந்து மாணவர்க ளுக்கான பரிசளிப்பு நிகழ்வு நடை பெற்றது.














# முஸ்லிம்களைப் பலிக்கடாவாக்க ஒருபோதும் அனுமதிக்க முடியாது

## ஹரீஸ் எம்.பி. காட்டம்

(பாறுக் ஷிஹான்)

போலியான கருத்துக்களை வெளியிட்டு பிள்ளையான் போன்றவர்கள் மீண்டும் முஸ்லிம் சமூகத்தை பலிக்கடாவாக்க ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

இவ்வாறு ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் செயலாளராக இருந்த ஆசாத் மௌலானா ஊடகங்களுக்கு தெரிவித் துள்ள கருத்தால் மக்கள் பல்வேறு சந் தேகங்களுடன் உள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தற்போது முஸ்லீம் மக்கள் மீது சிலர் சுயநலத்துக்காகக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

இது தொடர்பில் அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் விசேட செய்தியாளர் சந்திப்பு நேற்று திங்கட்கிழமை (11) இரவு இடம்பெற்றது.

இதன்பொது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-



சஹ்ரானின் சகோதரருடன் தொடர்புள்ள பிள்ளையான் தன்னை காப்பாற்றுவதற்காக முஸ்லிம் சமூகத்தை மீண்டும் பயங்கரவாத முத்திரை குத்துகிறார். இதனை நிறுத்த வேண்டும்.

சஹ்ரானின் சகோதரருடன் தொடர்புள்ளதை பல இடங்களில் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ள நிலையில் அவர் தன்னைக் காப்பாற்றுவதற்கு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபடுத்தி முஸ்லீம் மக்கள் மீது சிலர் சுயநலத்துக்காகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பது எம்மால் ஏற்க முடியாது.

நாட்டை உலுக்கிய ஈஸ்டர் தாக்குதல் ஆட்சி மாற்றத்தை இலக்குவைத்து நடத்தப்பட்டதாகவே நான் கருதுகின்றேன்.

மக்கள் பிரதிநிதி என்ற வகையில் தாக்குதல் தொடர்பிலான மௌலானாவின் ஊடகக் கருத்தை அடிப்படையாக கொண்டு ஓய்வுபெற்ற நீதிபதிகளை கொண்டு ஜனாதிபதி நியமிக்கவுள்ள விசாரணைக்குழுவுக்கு மேலதிகமாக புலனாய்வு பிரிவின் குழுவொன்றும் விசாரணைக்காக நியமிக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கைகள் மழுப்பல் நிலையிலையே வெளிவந்தன.

அதில் யாருக்கும் திருப்தியில்லை. இந்தத் தாக்குதலானது பாரதூரமான விளைவுகளை உண்டாக்கிய ஒன்றாகும்.

இந்த விடயம் தொடர்பில் சர்வதேச பொலிஸாரின் புலனாய்வு அறிக்கைகள் பெறப்பட வேண்டும்.

சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

கார்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்த தாக்குகளின் பின்னணியில் பெரிய சக்திகள் இருப்பதாக ஆரம்பம் முதலே கூறிவருகிறார்.

இந்தத் தாக்குகளில் முஸ்லிங்களும், கிறிஸ்தவர்களும் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.-என்றார்.



# வீதிகளில் கட்டாக்காலிகள்: போக்குவரததில் நெருக்கடி!

( அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் பல பகுதிகளிலுமுள்ள பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் வாகன சாரதிகளும் பாதசாரிகளும் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

கட்டாக்காலி மாடுகளை மேய்ச்சலுக்கு விடுவோர், தமது பராமரிப்பிலுள்ள மாடுகளை விளைச்சல் நிலங்களிலும் மக்கள் பயன்படுத்தும் பாதைகளிலும் குறிப்பாக பிரதான வீதிகளில் விடுவதால் பயணிகள் பெருஞ்சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதியில் பயணிக்கும் மோட்டார் சைக்கிளுக்கு முன்னால் இவை திடீரென பாய்வதால் விபத்துக்குள்ளாக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாநகர சபைகளாலும் ஏனைய பிரதேச சபைகளாலும் இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் தொடர்ச்சியான நிலையான திட்டமொன்று வகுக்கப்படாமையால் தொடர்ந்தும் கட்டாக்காலிகள் பிரதான வீதிகளிலேயே திரிகின்றன.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.




# கல்முனை ஸாஹிரா தேசிய மட்டத்துக்கு

(நூருல் ஹுதா உமர்)

மட்டக்களப்பு வெபர் உள்ளக அரங்கில் கடந்த 9 ஆம் 10 ஆம் திகதிகளில் நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான கரபந்தாட்டப் போட்டியில் 17 வயதுக்குட்பட்ட பிரிவில் கல்முனை ஸாஹிரா கல்லூரி அணி 2 ஆம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டது. 20 வயதுக்கு உட்பட்ட அணி 4ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

பாடசாலையில் இதற்கான பயிற்சி அளித்த உடற்கல்வி ஆசிரியர் எம். வை.எம்.றகீப், மாணவர்களுக்கு பயிற்சி அளித்து அழைத்துச் சென்ற உடற்கல்வி ஆசிரியர்களான எம்.எம்.றஜீப், எச்.எம்.ஜெமீன் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.எம்.ஜப்ரான் மற்றும் மாணவர்களுக்குக் கல்லூரி முதல்வர் எம்.எச். ஜாபீர் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

# குடிசன மதிப்பீட்டு செயலமர்வு





(அ.அஸ்வர் )

மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகத்தில் இலங்கையின் 15 ஆவது குடிசன மதிப்பீடுகளை மேற்கொள்ளல் தொடர்பான செயலமர்வு பிரதேச செயலாளரும் பிரதி தொகை மதிப்பு ஆணையாளருமான கோ.தனபாலசுந்தரம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு புள்ளி விவரவியலாளரும் பிரதித் தொகை மதிப்பு அத்தியட்சகருமான ரி.ஜெய்த்தனன் மற்றும் உதவி பிரதேச செயலாளர் நிருபா பிருந்தன் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ், பிரதேச செயலகப் புள்ளி விபரவியல் உத்தியோகத்தர் எம். எஸ். எம். நூமியின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கையின் 15 ஆவது குடிசன மதிப்பீடுகளை மேற்கொள்ளல் நிகழ்ச்சித் திட்டத்தின் முதற் கட்டமாக பிரதேசத்திலுள்ள கட்டிடங்களை நிரற்படுத்தல் தொடர்பாகத் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி, கிராம சேவை மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய துறைகள் சார்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# இருளில் மூழ்கும் பாடசாலை: கற்றல் செயற்பாடும் பாதிப்பு!

(மன்னார் நிருபர் )

மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட சின்ன பண்டிவிரிச்சான் அ.த.க. பாடசாலைக்கான மின் விநியோகம் இலங்கை மின்சார சபையால் துண்டிக்கப்பட்ட நிலையில், முழுமையான நிலுவை தொகையை செலுத்தி நீண்ட நாள்கள் ஆகியும் இதுவரை மின் இணைப்பு மீண்டும் வழங்கப்படவில்லை என்று பாடசாலை நிர்வாகத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

பாடசாலையின் மின் கட்டணம் 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபா இருந்த நிலையில் அதனைச் செலுத்தாத காரணத்தால் மடு மற்றும் வவுனியா மின்சார சபையால் கடந்த ஜூன் மாதம் மின்சார சபை அதிகாரிகள் வருகை தந்து பாடசாலைக்கான மின் இணைப்பை துண்டித்தனர்.

இந்த நிலையில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் சிலரின் உதவியுடன் பணம் சேகரிக்கப்பட்டு பாடசாலைக்கான மின் நிலுவைத் தொகை செலுத்தப்பட்டது.

நிலுவைத் தொகை செலுத்தி நீண்ட நாள்கள் ஆகியும் இதுவரை துண்டிக்கப்பட்ட இணைப்பு மீண்டும் வழங்கப்படவில்லை.

இதனால் பாடசாலையில் காணப்படும் திறன் பலகைகள் செயலற்று இருப்பதுடன் நிகழ்நிலை ஊடாக செயற்படுத்தும் விடயங்கள் பூர்த்தியற்று இருப்பதுடன் மாணவர்களின் கற்றல் கற்பித்தலில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக வவுனியா மின்சார சபையுடன் பாடசாலையின் அதிபர் தொடர்பை ஏற்படுத்துகின்ற போதும், மின் இணைப்பை உடனடியாக வழங்குகின்றோம் எனக் கூறுகின்றனரே தவிர இணைப்பை வழங்காது உள்ளனர் என்று பாடசாலைச் சமூகத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

# நூல் பிரதி வழங்கல்...



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் அண்மையில் எழுதி வெளியிட்ட பத்திகளின் தொகுப்பான 'சிதமு' (சிந்திப்போம்) நூலின் பிரதி வரலாற்றுச் சிறப்பு மிக்க கண்டி மல்வத்து மகா விகாரையின் சங்கைக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல மகாநாயக்க தேரரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மகாநாயக்க தேரர்கள் அன்பளிப்புகளை வழங்குவது அரிதான சந்தர்ப்பம் என்றாலும் இதன் போது மல்வத்து மகாநாயக்க தேரர் கறுப்பு யானை படை பதிக்கப்பட்ட ஞாபகார்த்த அன்பளிப்பை இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் வழங்கினார்.



# தொழில் முனைவோருக்குக் கருத்தரங்கு

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் 'நாளைய தொடுவானத்துக்கு வழி செலுத்துதல்' எனும் தலைப்பில் இலவச கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை (10) காரைதீவு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை நகர லயன்ஸ் கழக தலைவர் லயன் எம். சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் லயன் எம். கோபாலரத்தினம் கலந்து கொண்டார்.

தொழில் முனைவோர் மற்றும் உயர்கல்விக்காகக் காத்திருப்போர் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள் .

அங்குசாதனையாளர்களின்அனுபவப் பகிர்வு மற்றும் வளவாளர்களின் கருத்துக்கள் என்பன வழங்கப்பட்டன கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.





# பெண் அபிவிருத்தி குறித்த மாநாடு



(ஹஸ்பர்)

பெண்களின் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் இடைவெளிகளை அடையாளப்படுத்தல் என்ற தொனிப் பொருளில் வட்ட மேசைக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பெண்கள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

சமூக நல்லிணக்கத்துக்கான வலுவூட்டல் தளமாக இது அமைந்திருந்தது.

இந்தக் கலந்துரையாடல் விழுது அமைப்பின் ஏற்பாட்டில் திருகோணமலையில் உள்ள தனியார் மண்டபத்தில் சனிக்கிழமை (09)இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பெண்களின் தலைமைத்துவம் சார்ந்து முக்கிய பேசுபொருளாகிய நலன் புரிசேவைகள், வாழ்வாதாரம், பெண்களின் அரசியல் பங்கேற்பும் உள்நுழைவும் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இத்தகையதொரு ஒத்துழைப்பும் செயற்பாட்டுடன் கூடிய பங்குபற்றலும் தொடர்ந்து இருக்குமானால் பால்நிலை சமத்துவத்துடன் கூடிய சமூக நல்லிணக்கம் எட்டப்படுவது திண்ணம்.

இதில் விழுது அமைப்பின் திட்ட உத்தியோகத்தர் அபிவர்ணா வர்ண குலசிங்கம் உட்பட அரச அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# மணிப்பூரில் மீண்டும் பதற்றம்: குகி இனத்தவர்கள் கொலை!



மணிப்பூரில் குகி ஸோ இனத்தைச் சேர்ந்த மூவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதால் அங்கு மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

மணிப்பூரில் கங்போப்கி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட ஆயுதக் குழுவினர் இன்று அதிகாலை 3 மணியளவில் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குகி ஸோ இனத்தைச் சேர்ந்த மூவர் கொல்லப் பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் ஈடுபட்ட ஆயுதக் குழுவினர் ஒரு வாகனத்தில் வந்தனர் எனவும் அவர்கள் மேற்கு இம்பால் – கங்போப்கி மாவட்டங்களுக்கு இடையே உள்ள எல்லை கிராமங்களால் இரங், கராம் பகுதிகளில் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மலைகிராமங்களான இந்த இரு கிராமங்களிலும் பழங்குடிகளே அதிகம் வசிக்கின்றனர்.

கடந்த 8 ஆம் திகதி டெங்னோபால் மாவட்டத்தில் பாலல் எனுமிடத்தில் நடந்த வன்முறையில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

50 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். அந்தச் சம்பவத்தின் தாக்கம் குறைவதற்குள் இன்று மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

## ஒரே நாடு ஒரே தேர்தல்: சிந்தித்து செயற்படுங்கள்

### - நடிகர் சரத்குமார் ஆலோசனை



மத்திய அரசு ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது சாத்தியம் தானா என ஆராய்ந்து அமுல்படுத்த வேண்டும் என சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் 17 ஆவது ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம், திருப்பூர் பாண்டியன் நகரில் இடம்பெற்றது. இதில் கட்சியின் நிறுவன தலைவர் நடிகர் சரத்குமார் தலைமை தங்கி உரையாற்றுகையில், 2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் கஷ்டமோ, நஷ்டமோ சமத்துவ மக்கள் கட்சி தனியாக போட்டியிட வேண்டும். மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

வாக்களிக்க மக்கள் பணம் வாங்கக் கூடாது. மத்திய அரசு ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது சாத்தியம் தானா என ஆராய்ந்து அமல்படுத்த வேண்டும். 1967 வரை நாடாளுமன்றத் தேர்தலும், சட்டப்பேரவைத் தேர்தலும் ஒன்றாகத்தான் நடந்து வந்தது. இதன் பிறகு ஆட்சிகளை கலைக்கலாம் என்று எப்போது மத்திய அரசு முடிவு செய்ததோ, அன்றுமுதல் தேர்தல் மாறி மாறி வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

## விஜயலட்சுமி வழக்கு: சீமான் தரப்பு விளக்கம்!

நடிகை விஜயலட்சுமி விவகாரத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்ட வழக்கின் தொடர்ச்சியாகத்தான் தற்போதைய விசாரணை நடக்கிறதா? என்பது உள்ளிட்ட விவரங்களை பொலிஸ் ஆய்வாளரிடம் கேட்கப்பட்டுள்ளது என சீமான் தரப்பு வழக்கறிஞர் கூறியுள்ளார்.

நடிகை விஜயலட்சுமி அளித்த புகாரில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் விசாரணைக்கு ஆஜராக வளசரவாக்கம் பொலிஸ் ஆய்வாளர் சார்பில் சம்மன் அனுப்பப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சீமான் தரப்பில், வழக்கறிஞர்கள் இன்று ஆஜராகினர். அப்போது சீமான் தரப்பில், இரண்டு கடிதங்கள் பொலிஸ் ஆய்வாளரிடம் கொடுக்கப்பட்டது.

வளசரவாக்கம் பகுதியில், நாம் தமிழர் கட்சியின் நூற்றுக் கும் மேற்பட்ட தொண்டர்கள் திரண்டதால், தடுப்புகளை ஏற்படுத்தி பெலிஸார் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில், பொலிஸ் ஆய்வாளரிடம் சீமானின் கடிதங்களை வழக்கறிஞர் கொடுத்துள்ளார்.



# கிழக்கு லிபியாவில் கடும் புயல் தாக்கம்: 2,000 இற்கும் அதிகமானோர் உயிரிழப்பு!

கிழக்கு லிபியாவில் ஏற்பட்ட புயல் மற்றும் அனர்த்தங்கள் காரணமாக 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் வெளி யிடப்பட்டுள்ளது.

அந்த நாட்டின் இராணுவ உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கிழக்கு லிபியாவின் டேர்னா நகர் அதிகளவான பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். அந்த பகுதி அபாய வலையமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதியில் போக்குவரத்து, மின்சாரம் என்பன தடைப்பட்டிருப்பதால், மீட்பு பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

டெர்மா நகரில் மாத்திரம் இதுவரையில், ஆயிரத்து 200 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

புயல் காரணமாக, பெரும்பாலான சொத்துகள் சேதமடைந்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# உலகத்தின் கவனம் ஈர்த்த கிம் ஜங் உன்னின் கவச ரயில்



வட கொரிய ஜனாதிபதி கிம் ஜங் உன் ரஷ்யாவுக்கு செல்லவுள்ளார் எனவும் அவர் ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்திக்கவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், அவர் பயணிக்கும் பச்சை நிற ரயில் குறித்த புகைப்படங்கள் வெளியாகி கவனம் பெற்றுள்ளது.

ரஷ்யாவின் முன்னணி செய்தி நிறுவனம் கிம் ஜங் உன்னின் ரஷ்ய பயணத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

இதன்மூலம் அவர் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் வெளிநாட்டுக்குச் செல்கிறார்.

கிம் ஜங் – புடின் சந்திப்புக்கு நிகராக கிம் ஜங் பயணிக்கும் கவச ரயில் குறித்து தற்பொழுது அதிகம் பேசப்படுகிறது. அவர் வட கொரியாவிலிருந்து ரஷ்யா வரை சுமார் 1,180 கிலோ மீற்றர் தொலைவை ரயிலில் கடக்கிறார்.

மணிக்கு 59 கிலோ மீற்றர் வேகத்தில் மட்டுமே செல்லும் இந்த ரயில் பச்சை நிறத்தில் உள்ளது. 20 மணிநேரத்துக்கும் மேலாக கிம் ஜங் உன் இராணுவ அதிகாரிகள் படை சூழ பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

# உக்ரைனுக்கு பிரித்தானியா பயிற்சி: புடின் குற்றச்சாட்டு

ரஷ்ய உள்கட்டமைப்பு மீது தாக்குதல் நடத்த உக்ரைனுக்கு பிரித்தானியா இரகசிய சேவைகள் அமைப்பு, பயிற்சி அளித்து வருகிறது என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் குற்றம் சாட்டியுள்ளார்.

அணுமின் நிலையத்தை சேதப்படுத்த முயன்ற உக்ரைனிய இராணுவத்தின் முயற்சிகளை தமது பெடரல் செக்யூரிட்டி சர்வீஸ் வெற்றிகரமாக செயற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேநேரம் ஒவ்வொரு நாளும் ஆயிரம் முதல் ஆயிரத்து 500 ரஷ்யர்கள் இராணுவத்தில் சேர விருப்பம் தெரிவித்து வருகின்றனர் என்றும் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் தனது இராணுவ முயற்சியை அதிகரிக்க ரஷ்யா புதிய கட்டாய அணிதிரட்டலை மேற்கொண்டு வருகின்றது என்ற குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

குறிப்பாக கடந்த ஆறு அல்லது ஏழு மாதங்களில், 2 இலட்சத்து 70 ஆயிரம் பேர் தன்னார்வ ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர் என்றும் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.